**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8101955

1. District : மாவட்டம் திண்டுக்கல் | PS: காவல்நிலையம் ல.ஒ.த.க. பிரிவு திண்டுக்கல் | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 02/2024 | Date: நாள் 13.06.20

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act | Sections பிரிவுகள்: 7(a).
   (ii) Act சட்டம்: 1988 as amended in 2018 | Sections பிரிவுகள்: —
   (iii) Act சட்டம்: — | Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 12.06.2024 | Date to : நாள் வரை —
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 18.15 மணி | Time to : நேரம் வரை 23.00 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.06.2024 | Time நேரம் : 16.00 மணிக்கு
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.06.2024 | Time நேரம் : 16.00 மணிக்கு

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 20 கி.மீ தென்மேற்கு திசை கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகம்
   Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி —
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. ம. சிங்காரவேலன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மணவாளன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் ஆய்வுக்குழு ஆய்வாளர் | (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. திரு. P. செந்தில்குமார், உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர், கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம் மற்றும் 5 நபர்கள் விபரம் தனித்தாளில் - இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13/06/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13.06.2024 - 18.00 மணிக்கு.

Name: பெயர் P. பழனிச்சாமி
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு பி
திண்டுக்கல்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.02/2024, சட்டப்பரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தி அமைக்கப்பட்ட) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

| எதிரிகள்:- | திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான் இன்று 13.06.2024-ம் தேதி பகல் 16.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது மதுரை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.ம .சிங்காரவேலன், என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று 13.06.2024-ம் தேதி பகல் 16.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.ம.சிங்காரவேலன், த/பெ.மலையாண்டி, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மதுரை, பெறுநர். காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல் |
|---|---|
| 1)திரு.பொ.செந்தில்குமார். உதவியாளர் மற்றும் பொறுப்பு சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம்<br>2)திரு.கு.சிவப்பிரகாஷ், அலுவலக உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம்<br>3)திரு.ஐ.கண்ணன், Data Entry Operator, சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம்<br>4) திரு.பா.ரவிக்குமார், Camera Operator. Zigma Technology Pvt., Ltd.,Madurai<br>5) திரு.ச.முத்துராஜா, த/பெ.சக்திவேல், வடக்கு வெள்ளாளர்தெரு, ஆத்தூர், திண்டுக்கல் மாவட்டம்<br>6) திரு.செந்தில்முருகன், த/பெ ஜோதிமணி, க.எண்.67A, கிழக்குதெரு, கன்னிவாடி திண்டுக்கல் மாவட்டம், | |

நான் மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மதுரை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் உத்தரவுப்படி 12.06.2024ம் தேதி மதியம் சுமார் 17.15 மணிக்கு திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்கள் முன்பு ஆஜரானேன். திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் மற்றும் அலுவலர்கள் பத்திரபதிவிற்காக வரும் பொதுமக்களிடம் பத்திரங்களை பதிவு செய்வதற்கும், பதிவு செய்யப்பட்ட பத்திரங்களை திரும்ப ஒப்படைப்பதற்கும் வில்லங்க சான்று பெறுவது போன்ற சேவைகளை வழங்கவும், பத்திர

எழுத்தர்கள் மூலமாக லஞ்சத்தை பணமாக கேட்டு பெறுவதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மாலை 17.30 மணிக்கு திண்டுக்கல் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து நான் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.P.பழனிச்சாமி மற்றும் பார்ட்டி சகிதம் திடீர் சோதனை செய்வதற்காக அரசு வாகனம் TN 21 G 0583 பொலிரோ வாகனத்தில் கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சுமார் 18.10 மணிக்கு சென்றோம். கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் 18.15 மணிக்கு உள்ளே நுழைந்தபோது வடக்கு நோக்கி வாசல் அமைந்திருந்த அலுவலகத்தின் நுழைவு வாயிலில் சிலர் கையில் ஆவணங்களுடன் நின்றிருந்தனர். அதனை அடுத்து கிழக்கு முகம் பார்த்தவாறு சார்பதிவாளர் இருக்கையில் ஒருவர் அமர்ந்திருந்தார். அவரிடம் காவல் ஆய்வாளர் அவர்கள் அவரையும், என்னையும் அறிமுகம் செய்து கொண்டு அவரைப்பற்றி கேட்க அவரது பெயர் செந்தில்குமார் என்றும், நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணி ஒதுக்கப்பட்டு பொறுப்பு சார்பதிவாளராக கன்னிவாடி சார்பதிவகத்தில் கடந்த 07.06.2023 முதல் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் சோதனை செய்ய வந்த விபரத்தை தெரிவித்து சோதனைக்கு ஒத்துழைக்குமாறு காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டார். அவரும் சோதனைக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாக தெரிவித்தார். பின்னர் காவல் ஆய்வாளர் அவர்கள் பொறுப்பு சார்பதிவாளர் திரு.செந்தில்குமார் அவர்களிடம் அலுவலகத்தின் வருகைப்பதிவேட்டையும், தனிநபர் பணஇருப்பு பதிவேட்டையும் ஆஜர் செய்யும்படி கேட்டுக்கொண்டார். வருகைப்பதிவேட்டில் இன்று 12.06.2024ம்தேதி பொறுப்பு சார்பதிவாளர் P.செந்தில்குமார் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.கு.சிவபிரகாஷ் ஆகியோர் சுருக்கொப்பம் செய்திருந்தனர். உதவியாளர் பணியிடம் காலியாகவும், இளநிலை உதவியாளர் திருமதி.ஆசீயாபேகம் அயல்பணியாகவும், மற்றொரு இளநிலை உதவியாளர் திருமதி.அன்னத்தாய் மருத்துவ விடுப்பில் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. பின்னர் தனிநபர் பணஇருப்பு பதிவேட்டை ஆய்வு செய்தபோது 12.06.2024ம் தேதி பணஇருப்பாக கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டு சுருக்கொப்பம் இடப்பட்டிருந்தது.

| வ.எண் | அலுவலரின் பெயர் மற்றும் பதவி | கையிருப்பு விபரம் ரூ. |
|---|---|---|
| 1 | திரு.பொ.செந்தில்குமார். உதவியாளர் மற்றும் பொறுப்பு சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம். | 230/- |
| 2 | திரு.கு.சிவப்பிரகாஷ், அலுவலக உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம். | 600/- |
| 3 | திரு.ஐ.கண்ணன், Data Entry Operator, சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம். | 320/- |
| 4 | திரு.பா.ரவிக்குமார், Camera Operator. Zigma Technology Pvt., Ltd., Madurai. | குறிப்பிடப்படவில்லை |

பின்னர் காவல் ஆய்வாளர் அவர்கள் என் முன்பாக பொறுப்பு சார்பதிவாளர் அவர்களின் டேபிளின் மீது வைக்கப்பட்டிருந்த நீலக்கலர் சாப்பாட்டு பையினை திறந்து சோதனையிட்டபோது ஐநூறு ரூபாய்நோட்டுகள் கத்தையாக இருப்பது கண்டறியப்பட்டது. அதனை எண்ணிபார்த்தபோது ஐநூறு ரூபாய் தாள்கள் 60 எண்ணிக்கையில் ரூபாய் 30,000/- இருப்பது கண்டறியப்பட்டது. பின்னர் அவரது மேல்சட்டையின் வெளிபுற பாக்கெட்டை சோதனை செய்யதபோது அதில் 500x11=5500, 200x1=200, 100x2=200, 20x1=20, 10x1=10 என 5,930/- இருப்பது கண்டறியப்பட்டது. மேற்படி பணம் குறித்து பொறுப்பு சார்பதிவாளர் திரு.செந்தில்குமார் அவர்களிடம் காவல் ஆய்வாளர் அவர்கள் விளக்கம் கேட்டபோது, அதற்கு அவர் இன்று பணிக்கு வந்தபோது தனிநபர் பணஇருப்பு பதிவேட்டில் ரூ.230/- என்று எழுதி சுருக்கொப்பம் இட்டுள்ளதாகவும், மேலும் மீதி உள்ள பணமும் அவரது சொந்தபணம் என்றும், கைச்செலவுக்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இல்லாததால் பத்திரப்பதிவு செய்த பொதுமக்கள் மற்றும் ஆவண எழுத்தர்களிடமிருந்து லஞ்சமாக பெற்றபணம் என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருந்தது தெரியவந்ததாலும் விசாரணைக்காக மகஜரில் என்முன்பாக காவல் ஆய்வாளர் அவர்கள் பணம் ரூ.35,700/-ஐ கைப்பற்றினார். அவரது சொந்த பணம் ரூ.230/- அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது.

பின்னர் சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே போடப்பட்டிருந்த பெஞ்சில் மேற்குமுகம் பார்த்தவாறு ஐந்து நபர்கள் அமர்ந்திருந்தனர். அதில் ஒருவரை எழுப்பி விசாரிக்க அவரது பெயர் முத்துராஜா, வயது.32/2024, த/பெ.சக்திவேல், வடக்கு வெள்ளாளர்தெரு, ஆத்தூர், திண்டுக்கல் மாவட்டம் என்றும், பைனான்ஸ் மற்றும் ஆவண பதிவு தொடர்பான பணிகளை செய்து வருவதாகவும், ஆவண எழுத்தரான திரு.சுருளிநாதன் என்பவர் வாயிலாக ஆவணங்கள் தயார் செய்து கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து வருவதாகவும், மேலும் இன்று கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு இன்று பதிவு செய்யப்பட்ட ஆவண எண். 1359/2024, 1360/2024, 1367/2024 மற்றும் 1369/2024 ஆகிய ஆவணங்கள் பதிவு செய்தது தொடர்பாக பொறுப்பு சார்பதிவாளர் திரு.செந்தில்குமார் அவர்களை பார்க்க வந்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரை என் முன்பாக முன்பு சோதனை செய்தபோது அவரது சட்டையின் வெளிபுறமேல் பாக்கெட்டில் கீழ்கண்டவாறு பணம் இருப்பது கண்டறியப்பட்டது. 500x64=32,000, 500x2=1000, 100x1=100 என மொத்தம் 33,100/- இருப்பது கண்டறியப்பட்டது. பின்னர் அவர் அணிந்திருந்த டார்க் கிரே ஜீன்ஸ் பேண்டின் இடது பக்க சைடு பாக்கெட்டை சோதனை செய்த போது 500 ரூபாய் தாள்கள் 60 எண்ணிக்கையில் ரூ.30,000/-ம் இருப்பது கண்டறியப்பட்டது. பின்னர் அவரது பேண்டின் வலது பக்க சைடு பாக்கெட்டை சோதனை செய்தபோது கீழ்கண்டவாறு பணம் இருப்பது கண்டறியப்பட்டது 100x100 = 10,000/-, 500x45 = 22,500/-, 100x4 =400, 50x1= 50, 20x1= 20, 10x2= 20 என மொத்தம் ரூ.32,990/- இருப்பது கண்டறியப்பட்டது. பின்னர் அவரது பேண்டின் வலது பக்க பின் பாக்கெட்டை சோதனை செய்தபோது 500x 6 = 3,000/-, 50 x1 = 50, 20x1 = 20, 10x1 = 10 என மொத்தம் ரூ.3,080/- இருப்பது கண்டறியப்பட்டது. மேற்கண்ட பணம் குறித்து காவல் ஆய்வாளர் அவர்கள் விளக்கம் கேட்ட போது, அதற்கு அவர் அந்த பணம் அவரது சொந்தப்பணம் என்றும், பைனான்ஸ் மற்றும் ஆவணப் பதிவு பணிகளை செய்வதால் பணத்தினை கையில் வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், இன்று 12.06.2024 அன்று கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் அவர் சமர்ப்பித்த பத்திரத்தை விதிமுறைகளை மீறி பதிவு செய்து கொடுத்ததற்காக பொறுப்பு சார்பதிவாளர் திரு.செந்தில்குமார் அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டுவந்திருக்கலாம்

என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களால் என்முன்பாக முன்பாக மகஜரில் பணம் ரூ.97,000/- கைப்பப்பற்றப்பட்டது. மேலும் ரூ.2,170/- மட்டும் அவரது சொந்தப்பணம் என்பதால் என் முன்பாக அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்த மற்றொருவரை விசாரிக்க அவரது பெயர் திரு.செந்தில்முருகன், த/பெ ஜோதிமணி, க.எண்.67A, கிழக்குதெரு, கன்னிவாடி திண்டுக்கல் மாவட்டம் என்றும் சாஸ்தா ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் பணிபுரிவதாகவும், இன்று கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண். 1356/2024 தொடர்பாக பொறுப்பு சார்பதிவாளர் திரு.செந்தில்குமார் அவர்களைப் பார்க்க திரு.சுந்தரபாண்டி என்பவருடன் வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவரது கையில் வைத்திருந்த ஆவணம் குறித்து கேட்டபோது, அந்த ஆவணம் கடந்த 23.05.2024 அன்று கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1191/2024 ஆக பதிவு செய்யப்பட்டதாகவும், களப்பணி செய்யப்பட்ட பின்பு ஆவணத்தை பெறுவதற்காக இன்று வந்ததாகவும் தெரிவித்தார். அந்த ஆவணமானது பார்வையிடப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரை சோதனையிட சட்டையின் வெளிப்பக்க மேல்பாக்கெட்டில் 500 ரூபாய் தாள்கள் 24 எண்ணிக்கையில் ரூ.12,000/-ம் மற்றும் 200x1=200, 20x1=20, 10x1=10 என மொத்தம் ரூ.12,230/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் குறித்து காவல் ஆய்வாளர் அவர்கள் அவரிடம் விளக்கம் கேட்டபோது, அதற்கு அவர் அந்த பணம் அவரது சொந்தப்பணம் என்றும், கைச்செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், இன்று 12.06.2024 அன்று கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் அவர் சமர்ப்பித்த பத்திரத்தை விதிமுறைகளை மீறி பதிவு செய்து கொடுத்ததற்காக பொறுப்பு சார்பதிவாளர் திரு.செந்தில்குமார் அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டுவந்திருக்கலாம் என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களால் என் முன்பாக மகஜரில் பணம் ரூ.12,000/-ம் கைப்பப்பற்றப்பட்டது. மேலும் அந்த பணத்தில் ரூ.230/- மட்டும் அவரது சொந்த பணம் என்று அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அவரது அருகே அமர்ந்திருந்த மற்றொருவரை விசாரிக்க அவரது பெயர் திரு.சுந்தரபாண்டி, த/பெ பொன்னையா,

க.எண்.6/1-8, அரண்மனை தெரு, கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம் என்றும், சாஸ்தா ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் பணிபுரிவதாகவும், ஆவணப் பதிவு தொடர்பாக பொறுப்பு சார்பதிவாளர் திரு.செந்தில்குமார் அவர்களைப் பார்க்க திரு.செந்தில்முருகன் அவர்களுடன் வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சோதனையிட அவரது சட்டையின் வெளிப்புற மேற்பாக்கெட்டில் 100x2=200, 10x1=10 என ரூ.210/- இருந்தது. அதுபற்றி அவரிடம் கேட்க, அந்த பணம் அவரது சொந்த பணம் என்று தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத் தக்க வகையில் இருந்ததால், பணம் ரூ.210/- அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் சார்பதிவாளர் இருக்கையின் தெற்கே வடக்கு முகம் பார்த்தவாறு நின்றிருந்த மூன்று நபர்களை விசாரிக்க ஒருவரது பெயர் திரு.சிவப்பிரகாஷ் என்றும், அலுவலக உதவியாளராக கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிவதாகவும் தெரிவித்தார். மற்றொருவர் திரு.கண்ணன் என்றும், Data Entry Operator ஆக கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிவதாகவும், மற்றொருவரது பெயர் திரு.ரவிக்குமார் என்றும் IP Camera Operatorஆக கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிவதாகவும் தெரிவித்தனர். அவர்களில் அலுவலக உதவியாளர் திரு.சிவப்பிரகாஷ் என்பவரை சோதனையிட அவரது சட்டையின் வெளிப்புற மேல்பாக்கெட்டில் 500x9= 4,500/-, 100 x 8 = 800/-, 10x1 = 10 என மொத்தம் ரூ.5,310/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அதற்கு அவர் இன்று பணிக்கு வந்தபோது தனிநபர் பணஇருப்பு பதிவேட்டில் ரூ.600/- என்று எழுதி சுருக்கொப்பம் இட்டுள்ளதாகவும், மேலும் மீதி உள்ள பணமும் அவரது சொந்தபணம் என்றும், கைசெலவுக்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், பத்திரப்பதிவிற்காக வரும் பொதுமக்கள் மற்றும் பத்திர எழுத்தர்களிடம் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்று முகாந்திரம் இருப்பதால் பணம் ரூ.4,710/- மட்டும் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் பணம் ரூ.600/- மட்டும் அவரது சொந்தப்பணம் என்று நம்புவதற்கு தகுந்த காரணம் இருந்ததால் அந்த பணம் மட்டும் அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் Data Entry Operator திரு.கண்ணன் என்பவரை சோதனை செய்ய அவரது வெளிப்புற மேல் பாக்கெட்டில் பணம் 500x4 = 2000, 200x4 = 800/-, 100x 4 = 400 என மொத்தம் ரூ.3,200/- இருப்பது கண்டறியப்பட்டது.

மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அதற்கு அவர் இன்று பணிக்கு வந்தபோது தனிநபர் பணஇருப்பு பதிவேட்டில் பணம் எதுவும் இருப்பதாக எழுதி சுருக்கொப்பம் இடவில்லை என்றும், அந்த பணம் அவரது சொந்தபணம் என்றும், கைசெலவுக்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், பத்திரப்பதிவிற்காக வரும் பொதுமக்கள் மற்றும் பத்திர எழுத்தர்களிடம் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்று முகாந்திரம் இருப்பதால் பணம் ரூ.2,880/- மட்டும் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் பணம் ரூ.320/- மட்டும் அவரது சொந்தப்பணம் என்று நம்புவதற்கு தகுந்த காரணம் இருந்ததால் அந்த பணம் மட்டும் அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் IP Cameral Operator திரு.ரவிக்குமார் என்பவரை சோதனை செய்ய அவரது பேண்டின் வலது பக்க சைடு பாக்கெட்டில் 500 x 23 = 11,500/-, 200x2 = 400/-, 100x4= 400/- என மொத்தம் ரூ.12,300/- இருப்பது கண்டறியப்பட்டது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அந்தப்பணம் அவரது சொத்தப்பணம் என்றும், கைச்செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், பத்திரப்பதிவிற்காக வரும் பொதுமக்கள் மற்றும் பத்திர எழுத்தர்களிடம் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்று முகாந்திரம் இருப்பதால் பணம் ரூ.12,010/- மட்டும் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் பணம் ரூ.290/- மட்டும் அவரது சொந்தப்பணம் என்று நம்புவதற்கு தகுந்த காரணம் இருந்ததால் அந்த பணம் மட்டும் அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அவரது சட்டையின் வெளிப்புற மேல்பாக்கெட்டை சோதனை செய்தபோது பணம் ரூ.290/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் குறித்து கேட்டபோது அது அவரது சொந்த பணம் என்றும், கைச்செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தின் வாயிற் கதவு அருகே நின்று கொண்டிருந்த நபர்களை விசாரிக்க அவரது பெயர் திரு.வினோத்குமார், த/பெ செல்வராஜ், க.எண்.4, சத்தியமூர்த்தி நகர், புதுச்சந்தை கிழக்கு, காரைக்குடி என்றும் தெரிவித்தார். மேலும் திண்டுக்கல் கருப்பன்சேர்வைகாரன் பட்டியை சேர்ந்த திரு.திருமூர்த்தி என்பவருக்கு சொத்து ஒன்றினை விற்பதாகவும், அது தொடர்பான ஆவணப் பதிவினை மேற்கொள்ள

ஆத்தூரை சேர்ந்த திரு.முத்துராஜா மற்றும் சொத்தை வாங்கும் திரு.திருமூர்த்தி ஆகியோர்களுடன் கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்ய பணம் ரூ.270/- வைத்திருந்தார். அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க, அந்தப்பணம் அவரது சொந்தப்பணம் என்றும், கைச்செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருந்ததால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்த திண்டுக்கல் மாவட்டம், பண்ணைப்பட்டி அஞ்சல், எண்.319, கருப்பன்சேர்வைக்காரன் பட்டியை சேர்ந்த திரு.திருமூர்த்தி என்பவரை விசாரிக்க, திரு.வினோத்குமார், த/பெ செல்வராஜ், க.எண்.4, சத்தியமூர்த்தி நகர், புதுச்சந்தை கிழக்கு, காரைக்குடி என்பவரிடமிருந்து சொத்து ஒன்றினை வாங்குவதாகவும், அது தொடர்பான ஆவணப் பதிவினை மேற்கொள்ள ஆத்தூரை சேர்ந்த திரு.முத்துராஜா மற்றும் சொத்தை விற்கும் திரு.வினோத்குமார் ஆகியோர்களுடன் கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்ய பணம் ரூ.50/- வைத்திருந்தார். அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க, அந்தப்பணம் அவரது சொந்தப்பணம் என்றும், கைச்செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருந்ததால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அங்கிருந்த திரு.ராஜ்குமார், த/பெ தங்கராஜ், எண்.168, குரும்பபட்டி, பழைய கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம் என்பவரை விசாரிக்க, அவர் ஆவணப் பதிவு தொடர்பாக ஆத்தூரை சேர்ந்த திரு.முத்துராஜா அவர்களை சந்தித்து விபரம் கேட்பதற்காக திண்டுக்கல் மாவட்டம், தருமத்துப்பட்ட பழனி ஆண்டவர் கோவில் தெருவை சேர்ந்த திரு.சுரேஷ்குமார் அவர்களுடன் வந்ததாகவும் தெரிவித்தார். இருவரையும் சோதனையிட திரு.ராஜ்குமார் அவர்களிடம் பணம் ரூ.260/- மற்றும் திரு.சுரேஷ்குமார் அவர்களிடம் ரூ.950/- அவர்களது சட்டையின் வெளிப்புற மேல் பாக்கெட்டில் வைத்திருந்தனர். அந்த பணம் குறித்து அவர்களிடம் கேட்க, அந்தப்பணம் அவர்களது சொந்தப்பணம் என்றும், கைச்செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். அவர்களது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருந்ததால் அவர்களிடமே பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அலுவலகத்தின் அறைகளில் போடப்பட்டிருந்த இருக்கைகள் மற்றும் பதிவேடுகளில் சோதனை செய்தபோது

சந்தேகப்படும்படியான ஆவணங்களோ, பணமோ காணப்படவில்லை. பின்னர் அந்த அலுவலகத்தின் முதல் மாடி குறித்து பொறுப்பு சார்பதிவாளர் திரு.செந்தில்குமார் அவர்களிடம் கேட்டபோது, முதல் மாடியில் பழைய ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் வைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். அந்த அலுவலகத்தின் முதல்மாடியில் இருந்த மூன்று அறைகளை சோதனை செய்தபோது சந்தேகப்படும்படியான ஆவணங்களோ, பணமோ காணப்படவில்லை. அவற்றில் பதிவேடுகள் மற்றும் பழைய ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தின் வளாகத்திற்குள் வடக்குமுகம் பார்த்தவாறு நிறுத்தப்பட்டிருந்த TN 57 BM 7852 Renault Triber என்ற வாகனம் குறித்து கேட்டபோது, அலுவலக உதவியாளர் திரு.சிவப்பிரகாஷ் என்பவர் அந்த வாகனமானது அவரது மாமா திரு.மாரிராஜ் என்பவருக்கு சொந்தமானது என்றும், அலுவலகத்திற்கு வருவதற்காக எடுத்து வந்ததாகவும், பணிமுடித்து செல்லும் போது பொறுப்பு சார்பதிவாளர் திரு.செந்தில்குமார் அவர்களை அழைத்துக்கொண்டு திண்டுக்கல்லில் இறக்கிவிட பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார். அந்த வாகனத்தினை என் முன்பாக சோதனை செய்தபோது ஒட்டுனர் இருக்கைக்கு பின்னால் இருந்த இருக்கையில் இன்று 12.06.2024ம் தேதி திரு.பொன்னுச்சாமி என்பவர் பெயரில் பதியப்பட்ட ஆவண எண். 1355/2024 என்ற ஆவணத்தின் அசலானது காணப்பட்டது. அந்த ஆவணம் குறித்து அலுவலக உதவியாளர் திரு.சிவப்பிரகாஷ் அவர்களிடம் கேட்டபோது, அந்த ஆவணத்தை சம்மந்தப்பட்ட நபரிடம் கொடுப்பதற்காக பொறுப்பு சார்பதிவாளர் திரு.செந்தில்குமார் அவர்கள் அறிவுறுத்தியதாக தெரிவித்தார். பின்னர் காவல் ஆய்வாளர் அவர்கள் பொறுப்பு சார்பதிவாளர் திரு.செந்தில் குமார் அவர்களிடம் அந்த ஆவணத்தை சம்மந்தப்பட்ட நபரிடம் முறையாக ஒப்படைக்குமாறு அறிவுறுத்தினார். பின்னர் காவல் ஆய்வாளர் அவர்கள் பொறுப்பு சார்பதிவாளர் அவர்களிடம் 12.06.2024ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்து கேட்டபோது அதற்கு பொறுப்பு சார்பதிவாளர் அவர்கள் இன்று 16 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாக தெரிவித்தார். பின்னர் காவல் ஆய்வாளர் அவர்கள் பொறுப்பு சார்பதிவாளர் அவர்களிடம் 12.06.2024 அன்று பதிவு செய்யப்பட்ட ஆவணப் பதிவு தொடர்பாக அறிக்கையை கணிணியிலிருந்து பதிவிறக்கம் செய்து சான்றொப்பம் இட்டு வழங்குமாறு கேட்டுக்கொண்டார். அதன்படி கீழ்கண்ட

ஆவணங்களை சான்றொப்பமிட்டு விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களிடம் வழங்கினார்.

| வ எண். | ஆவண விபரம் | தாள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | Year 2024 Month June Account A Kannviadi , Date 12.06.2024 | 1 |
| 2. | Year 2024 Month June Account D Kannviadi , Date 12.06.2024 | 1 |
| 3. | Year 2024 Month June Account H Kannviadi , Date 12.06.2024 | 1 |
| 4. | Year 2024 Month June IP Camera / CD Account Kannviadi , Date 12.06.2024 | 1 |
| 5. | Year 2024 Month June Section 41 Account Kannviadi , Date 12.06.2024 | 1 |
| 6. | Year 2024 Month June Sub Division Account Kannviadi , Date 12.06.2024 | 1 |

மேற்கண்ட ஆவணங்கள் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் காவல் ஆய்வாளர் அவர்கள் பொறுப்பு சார்பதிவாளர் திரு.செந்தில்குமார் அவர்களிடம் கீழ்கண்ட ஆவணங்களை ஆஜர் செய்யுமாறு அறிவுறுத்தினார்.

| வ எண். | ஆவண விபரம் |
|---|---|
| 1. | இயக்கப்பதிவேடு, தொகுதி எண். 44, சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி, ஆரம்பம் 02.01.2024. |
| 2. | குறுந்தகடு வழங்கும் பணியாளர் வருகைப் பதிவேடு, தொகுதி எண்.6, சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி ஆரம்பம் 02.01.2024. |
| 3. | தகவல் தொகுப்பு பணியாளர் வருகை பதிவேடு, தொகுதி எண்.7, சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி ஆரம்பம் 02.01.2024. |
| 4. | வருகைப் பதிவேடு தொகுதி எண்.44, சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடிஆரம்பம் 02.01.2024. |
| 5. | வருகைப் பதிவேட்டின் சுருக்கப் பதிவேடு, தொகுதி எண்.44, சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடிஆரம்பம் 02.01.2024. |
| 6. | ஆவணம் திரும்ப வழங்கும் பதிவேடு ஆரம்பம் 03.05.2024. |
| 7. | தனிநபர் பண இருப்பு பதிவேடு தொகுதி எண்.44, சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி, ஆரம்பம் 02.01.2024. |

மேற்கண்ட ஆவணங்களை நான் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் பார்வையிட்டு தொடர்புடைய பக்கங்களில் பார்வையிட்டதற்கு அடையாளமாக கையொப்பமிட்டோம். பின்னர் காவல் ஆய்வாளர் அவர்கள் பொறுப்பு சார்பதிவாளர் திரு.செந்தில்குமார் அவர்களிடம் மேற்கண்ட ஆவணங்களின் தொடர்புடைய பக்கங்களை நகல் எடுத்து சான்றொப்பமிட்டு வழங்குமாறு கேட்டுக்கொண்டார். அவ்வாறே அவரும் அந்த ஆவணங்களில் தொடர்புடைய பக்கங்களை நகல் எடுத்து சான்றொப்பமிட்டு விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களிடம் வழங்கினார். அந்த ஆவணங்கள் விசாரணைக்காக மகஜரில் கைப்பப்பற்றப்பட்டது. சோதனையின் போது ரூ.1,64,300/- பணமானது பத்திரப்பதிவிற்கு வரும் பொதுமக்கள் மற்றும் பத்திர எழுத்தர்களிடமிருந்து லஞ்சயாக பெற்ற பணம் என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருந்ததால், கீழ்கண்ட நபர்களிடமிருந்து மகஜரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

| வ.எண் | அலுவலரின் பெயர் மற்றும் பதவி | கைப்பற்றப்பட்ட பணம் விபரம் |
|---|---|---|
| 1 | திரு.பொ.செந்தில்குமார். உதவியாளர் மற்றும் பொறுப்பு சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம். | ரூ.35,700 |
| 2 | திரு.கு.சிவப்பிரகாஷ், அலுவலக உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம். | ரூ.4,710 |
| 3 | திரு.ஐ.கண்ணன், Data Entry Operator, சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி,திண்டுக்கல் மாவட்டம். | ரூ.2,880 |
| 4 | திரு.பா.ரவிக்குமார், Camera Operator. Zigma Technology Pvt., Ltd.,Madurai. | ரூ.12,010 |
| 5 | திரு.ச.முத்துராஜா, த/பெ.சக்திவேல், வடக்கு வெள்ளாளர்தெரு, ஆத்தூர், திண்டுக்கல் மாவட்டம் | ரூ.97,000 |
| 6 | திரு.செந்தில்முருகன், த/பெ ஜோதிமணி, க.எண்.67A, கிழக்குதெரு, கன்னிவாடி திண்டுக்கல் மாவட்டம் | ரூ.12,000 |
| | மொத்தம் | ரூ.1,64,300 |

ஆக மொத்தம் மேற்சொன்னவாறு கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,64,300/-ம் ஆவணங்களை பதிவு செய்து தருவதற்கும், அது தொடர்பான பணிகளை செய்வதற்கும் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்று நம்புதவற்கு தகுந்த முகாந்திரம்

இருந்ததால் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனையின் போது நான் மேலே கண்டவாறு பணம் கைப்பற்றப்பட்ட அலுவலர்கள் மற்றும் தனி நபர்களிடம் விசாரணை செய்து தனித் தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இத்திடீர் தணிக்கையின் போது அலுவலகத்திலிருந்த ஆவணங்களுக்கோ மற்ற பொருட்களுக்கோ சேதம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் சோதனையின் போதிருந்த அலுவலர்களுக்கோ, மற்றவர்களுக்கோ உடல் ரீதியாகவோ மற்றும் மன ரீதியாகவோ எவ்வித துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. இந்த திடீர் இணை ஆய்வு தொடர்பாக செயல்முறை குறிப்புகள் 12.06.2024ம் தேதி மாலை சுமார் 18.15 மணிமுதல் 23.00 மணிவரை தயார் செய்யப்பட்டது. எனவே மேற்படி அலுவலகத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,64,300/-ம் மற்றும் பத்திரபதிவிற்காக நேர்மையற்ற முறையில் லஞ்சம் கொடுப்பதற்காக பணத்துடன் வருகை தந்த திரு.ச.முத்துராஜா, த/பெ.சக்திவேல், வடக்கு வெள்ளாளர்தெரு, ஆத்தூர், திண்டுக்கல் மாவட்டம் 2) திரு.செந்தில்முருகன், த/பெ ஜோதிமணி, க.எண்.67A, கிழக்குதெரு, கன்னிவாடி திண்டுக்கல் மாவட்டம், பத்திரபதிவிற்காக வந்த பொதுமக்களிடம் பத்திரங்களை பதிவு செய்வதற்கும், பதிவு செய்யப்பட்ட பத்திரங்களை திரும்ப ஒப்படைப்பது போன்ற சேவைகளை வழங்க 1) திரு.பொ.செந்தில்குமார். உதவியாளர் மற்றும் பொறுப்பு சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம் 2) திரு.கு.சிவப்பிரகாஷ், அலுவலக உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம் 3) திரு.ஐ.கண்ணன், Data Entry Operator, சார்பதிவாளர் அலுவலகம், கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம் 4) திரு.பா.ரவிக்குமார், Camera Operator. Zigma Technology Pvt., Ltd.,Madurai ஆகியோர் முறையற்ற முறையில் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்று நம்புதவற்கு தகுந்த முகாந்திரம் இருப்பதால் மேற்படி அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/- xxxxx (M.Singaravelan, 13/06/2024)

Sir, Received the complaint on 13.06.2024 at 16.00 Hrs. and registered a case in Dindigul Vigilance and Anti-Corruption Cr.No.02/2024 u/s 7(a) of P.C Act 1988, as amended in 2018 on 13.06.2024 at 16.00 hrs. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 13.06.2024)

Original FIR along with the complaint of Tr.M.Singaravelan, the Inspection Cell Inspector, O/o. the District Inspection Cell Officer, Madurai and the Joint Surprise check proceedings are submitted to the Hon'ble Chief Judicial Magistrate / Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

13/06/24

(P.Palanisamy)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.